அந்த அடிப்படையிலே உறுப்பினர்கள் சொல்லுகிற நேரத்தில் அதற்காக ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டு வருகின்ற முன்னுதாரணம் இந்தச் சட்டமன்றத்தில் தொடர்ந்து நீடிக்க வேண்டாம் என்பது எங்களுடைய கருத்து. அதுமட்டுமல்ல, காவல் துறை மானியக் கோரிக்கை விவாதம் இரண்டு நாட்கள் நடைபெற்றன. எந்த மானியக் கோரிக்கையானாலும், இரண்டு நாட்களுக்கு எடுத்துக்கொண்டாலும்கூட, அந்த விவாதத்தில் பா.ம.க., காங்கிரஸ், அ.தி.மு.க. கட்சியினர் பேசுவது வழக்கம்; தொடர்ந்து அனுமதி கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், காங்கிரஸ் கட்சி, அ.தி.மு.க. உறுப்பினர்கள் அரை மணி நேரம், ஒரு மணி நேரம் என்று பேசுகிற நேரத்தில், பாட்டாளி மக்கள் கட்சிக்கு இரண்டு நாட்களுக்கும் சேர்த்து 15 நிமிடங்கள் மட்டும்தான் என்று சொல்வதும், ஒரே நாள்தான் உங்களுக்கு அனுமதி என்று சொல்வதும் எந்தவிதத்திலே ஏற்புடையதாக இருக்கும்? இது எதிர்க்கட்சிகளைப் புறக்கணிப்பதாக இருக்கிறதா இல்லையா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, உள்ளபடியே ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர்—அவர்களுக்கு என்ன எண்ணம் இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்புகிறமாதிரி ஆளுங்கட்சியினர் பேசுவதைவிட, எதிர்க்கட்சிகளுக்கு அதிக வாய்ப்புக் கொடுத்து, அவர்களின் கருத்தைக் கேட்டு அதை நடைமுறைப்படுத்தினால் ஏற்புடையதாக இருக்கும். ஆகவே, இனி வருங்காலங்களிலாவது அப்படிப்பட்ட நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனி வருகிற காலங்களில் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி முடிவெடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘முதலமைச்சர் அவர்கள் விரும்புகிறபடி’ பேசுவதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று மணி அவர்கள் பேசியதையே ‘குறும்புத்தனம்’ என்று சொல்லமாட்டேன்; ‘விஷமத்தனம்’ என்றும் விமர்சிக்கமாட்டேன்; அவர்கள் என்னிடத்தில் எடுத்துக்கொள்கின்ற உரிமையின் காரணமாக அவர்கள் எடுத்துச்சொன்னதாக நான் கருதுகின்றேன். ஆனாலும், கடந்த காலத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது காங்கிரஸ் கட்சி அல்லது அன்றைக்கு எங்களோடு உறவாக இருந்த பாட்டாளி மக்கள் கட்சி, இந்தக் கட்சிகளுக்கு எல்லாம் பேசுவதற்கான உரிமை மறுக்கப்பட்டதும், அதன் காரணமாக எல்லோரும் சேர்ந்து

வெளிநடப்புச் செய்ததும் உண்மை. ஆனால் வெளியிலே போகும்பொழுது, 'சபாநாயகர் ஒழிக', 'முதலமைச்சர் ஒழிக' என்றெல்லாம் 'ஒழிக' கோஷமெல்லாம் அந்தக் காலத்திலே போட்டது கிடையாது. நாகரிகமாக நாம் நடந்துகொண்டோம்; உங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். ஆனால் இன்றைக்கு அந்த நாகரிகம் இல்லை, அது சேருவார் தோஷமாகக்கூட இருக்கலாம். அதைத் தயவுசெய்து நம்முடைய அருமை நண்பர் மணி அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். இன்றைக்குக்கூட எடுத்த முடிவு, நேற்றையதினம் நடைபெற்றுவிட்ட ஒரு நிகழ்ச்சி, அவைக் கூட்டத் தொடர் முடிகிற நேரத்தில் தேவையில்லை என்பதை நான் எண்ணிப்பார்த்து, அவை முன்னவரோடு கலந்துபேசி, உரிமைப் பிரச்சினை கொடுத்த ஆற்காடு வீராசாமி அவர்களிடத்திலும் கலந்துபேசித்தான், இப்போது இதைத் திரும்பப் பெற வேண்டுமென்ற வேண்டுகோள் இந்த அவையிலே பேரவைத் தலைவர் அவர்களுக்கு வைக்கப்பட்டது. அதை அவர் ஏற்றுக்கொண்டார்.

கொஞ்சம் ஐந்தாறு நிமிடங்கள் என்னோடு, ஐந்தாறு பேரை வைத்துக்கொண்டு, கட்சியினுடைய தலைவர்களை வைத்துக்கொண்டு, இது சம்பந்தமாக மணி போன்றவர்களும், விவாதிக்கத் தயார் என்றால், நான் தயாராக இருக்கின்றேன். யார் யாருக்கு எத்தனை நிமிடங்கள் கொடுக்கப்பட்டு, அதற்குமேலாக எத்தனை நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரங்களை எல்லாம் எடுத்து வைத்து நாம் பார்த்தால், நியாயங்கள் நிச்சயமாக நமக்குப் புலப்படும். ஏதோ ஆளுங்கட்சிக்குத்தான் அதிக நேரம், காங்கிரஸ் கட்சிக்குத்தான் அதிக நேரம், தோழமைக் கட்சிகளுக்குத்தான் அதிக நேரம் என்ற அளவிலே இந்த ஆளுங்கட்சி நடந்துகொள்ளவில்லை என்பதையும், எதிர்காலத்திலே அப்படி நடக்காது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்கு உறுதியாக எடுத்துக்கூற விரும்புகின்றேன். ஆனால் ஒவ்வொரு நாளும், ஒன்றரை மணிக்கு முடிய வேண்டிய அவை, இரண்டரை மணி வரையிலே போகிறது; மூன்று, மூன்றரை மணிவரையிலே நடைபெறுகிறது. இதெல்லாம் அவரவர்களுக்கு விரும்புகிற நேரத்திலே, அவர்கள் கையைக்காட்டி, அவர்கள் கொஞ்சம் இன்னொரு ஐந்து நிமிடங்கள் என்று கேட்டு, இப்படி இரண்டு, இரண்டு நிமிடங்களாக உயர்ந்த நேரம் எவ்வளவு என்பதையும் தயவுசெய்து நாம் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவையின் நேரத்தை நாம்தான் பயனுள்ளதாக ஆக்கவேண்டுமேயல்லாமல், அதை வீணாக ஆக்கிவிடக் கூடாது.